உ

ஸ்ரீவாணீ சகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.


வெண்டாமரை ௭. | 1919-ம் ஆ௵ பிப்ரவரி மீ௳ | இதழ் ௨.


## திருக்குறள் வியாசம்.

### ௧௫-ம் அதிகாரம்.

### பிறனில் விழையாமை.

உள்ளுறை:—(1) பிறனில் விழையாமை யென்பது. (2) பிறனில் விழைவான்கண் குற்றம். (3) பிறனில் விழையாதான்கண் குணம். (4) முடிவுரை.

### விளக்கம்.

பிறனில் விழையாமையாவது காம மயக்கத்தினாலே பிறனுடைய மனையாளை விரும்பாமை யாம். இவ்வொழுக்க முடையோரே உலகிற் பெரியோராவர்.

பிறனது மனைவியை விரும்புதல் பெரிதும் பேதைமையாகும். இன்பம் ஒன்றையே நோக்கும் இவ் வறிவிலிகளிடத்து அறமும் பொருளும் எங்ஙனம் உண்டாகும்? ஒருபோது முண்டாகாது. இத் தீயொழுக்கம் அறிஞரிடத்துண்டாகுமோ? *'பிற

* பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

னுக்குப் பொருளாந் தன்மை யுடையாளை (மனைவியை)க் காதலித்து நடக்கின்ற அறியாமையானது, உலகின்கண் அறநூலையும் பொருள்நூலையும் ஆராய்ந்தவ ரிடத்து இல்லை' என்க. பிறன் மனை நயப்பவரிடத்து அறமும் பொருளும் மட்டுமோ உண்டாவதில்லை? இன்பமும் உண்மையில் இல்லை யென்றுணர்க. பிறன் மனையிடத்துப் புகும்போதும் வரும்போதும் துய்க்கும்போதும் அச்சமே விளைதலின் இன்பம் எங்ஙனம் உண்டாகும்? பாவச்செயலிலே நின்ற பெண்வழி நடப்பவரும், விலை மகளிரோடும் இழிகுல மகளிரோடும் கூடி இன்பம் நுகர்வாரும்போல அறமும் பொருளும் இழத்தலே யன்றி, பிறன் மனையாளிடத்துச் செல்வோர் அச்சத்தினாலே தாம் கருதிய இன்பத்தையு மிழக்கின்றனர். ஆதலின், *'காமங் காரணமாகப் பாவத்தின்கண் நின்றவரெல்லாருள்ளும் பிறன் மனைவியைக் காதலித்து அவன் வாயிலினிடத்துச் சென்று நின்றார்போல மூடர் இல்லை' என்க. பிறன் மனை நயந்தவர்க்கும் உலகில் இறந்தவர்க்கும் வேற்றுமை யுண்டோ? இல்லை. ஏன்? உயிரிருந்தால் அது அறம் பொருளின் பங்களை யடைதல்வேண்டும். பிறன் மனை விழைபவர் அவ்வுறுதிப் பொருள்களை யடையாமையால் அவ் வுயிரிருந்தும் பயனில்லை யன்றோ. ஆதலின், †'தம்மை ஐயப்படாதவரது மனையாளிடத்தே பாவஞ்செய்தலை விரும்பி நடப்பவர், உயிருடையரேனும் இறந்தவரேயாவர்' என்றற்கு யாதுதடை? தம்மை நல்லவரென்று தெளிந்தவரிடத்து இத்தகைய குற்றஞ் செய்தல் எத்துணைப் பெரும்பாவ மென்பதை ஒவ்வொருவரும் உய்த்துணரவேண்டும். இத் தீயொழுக்க முடையோர்க்கு உலகிற் பெருமை யுண்டோ? இல்லவே யில்லை. இந்திரன் பெருமை யென்னே! கௌதமமுனிவரது மனைவியை விரும்பியதனால் தன்பெருமை யெல்லாமிழந்து

---

* அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

† விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

அவன் எய்திய சிறுமை யென்னே! ஆதலின், *'காம மயக்கத்தால் தினையளவும் தன் பிழையை நினையாமல் பிறனுடைய மனையாளிடத்தே செல்லுதல், எவ்வளவு பெருமையுடையரா யிருப்பினும் ஒருவர்க்கு யாதாய் முடியும்?' அவர்க்கு அது சிறுமையாகவே முடியுமென்க. பிறன் மனை நயப்பவன் பெருமை முதலியவற்றை யிழப்பதுமன்றி இம்மையிற் பழியையும் எய்துகின்றான். †'இவளைச் சேர்தல் எளிதென்று நினைத்து, பின்விளைவு கருதாது, பிறன் மனைவியினிடத்துச் செல்லுவோன், அழியாமல் எக்காலத்தும் நிலை நிற்பதாகிய குடிப்பழியை யடைவான்' என்று ஆன்றோர் அறையாநின்றனர். அம்மட்டோ! ‡'பிறன் மனைவியினிடத்தே நெறிகடந்து செல்வானிடத்து, பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம்.' ஆகவே இம்மை மறுமை யென்னும் இருமைப் பயன்களையும் அவன் இழந்துவிடுகிறானென்பது ஒருதலையன்றோ? பிறன்மனை விழைபவனிடத்து இன்னோரன்ன குற்றங்கள் ஏற்படுகின்றன வாதலின், இவைகட் கிடமாம்படி யொழுகுதல் அறிவுடைமை யன்று.

இனி, பிறன் மனை விரும்பாதவனிடத்துக் குணங்களைச் சிறிது ஆராய்வோம். §'பிறனுக்கு உரிமைபூண்டு அவனுடைய இயல்பின்கண்ணே நிற்பாளது (மனைவியினது) பெண்தன்மையை விரும்பாதவன், அறமாகிய இயல்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்' என்று பெரியோர் கூறுவர். ஆகவே இல்

---

* எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

† எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

‡ பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

§ அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

லறம் செய்வா னென்னப்படுவான் அவனே யென்றுணர்க. மேலும், பிறர்மனைப் புகாமையே பெரியோர்க்குப் பேராண்மை யாகும். * 'பிறனது மனையாளை யுட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை, அறிவால் நிறைந்தோர்க்கு அறமுமாம், நிரம்பிய ஒழுக்கமுமாம்.' புறப்பகைகளை யடக்கும் ஆண்மை யுடையார்க்கும் உட்பகையாகிய காமத்தை யடக்குதல் அருமையாதலின், அதனை யடக்கிய ஆண்மையே பேராண்மை யாகும். அவரன்றோ பெரியோராவர். செய்தற்கரிய அறமும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையினாலேயே யுண்டாமெனக. உலகில் நன்மைகளை யெல்லாம் அடைதற்குரியவர் மக்களே யன்றோ? பிறர்மனை நயப்பவர்கள் அந்நன்மைகளை யடைவார்களா? ஒருபோதும் அடையமாட்டார்கள். † 'அச்சந்தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து, எல்லா நன்மைகளையும் எய்துதற்குரியார் யாவரெனின், பிறனுக்கு உரிமையானவளது (மனைவியினது) தோள்களைச் சேராதவர்.' இருமையினும் அவரே நன்மை யெய்துவ ரெனக. சுருங்கச் சொல்லின், ‡ 'ஒருவன் அறத்தைத் தனக்கு உரியதாகச் செய்யாது பாவங்களைச் செய்வானாயினும் அவனுக்கு, பிறன் எல்லையிலே நிற்பவளது (மனைவியினது) பெண் தன்மையை விரும்பாமை யுண்டாயின், அது நன்று, எனக. அக் குற்றங்களினும் இக் குணமே மேற்பட்டுத் தோன்றுமென்றுணர்க.

இதுகாறுங் கூறியவாற்றால், பிறர் மனை விழையுந் தன்மை பெரியோரிடத்தில்லை யென்பதும், பிறர் மனைவியை விரும்பி நடப்பவரைப் போல அறிவின ரில்லை யென்பதும், ஐயப்படாதவரிடத்து இத்தீமை புரிவோர் உயிரோடிருந்தும் இறந்தவரே யாவரென்பதும், பிறர்மனைப் புகுதல் பெருமையைக் கெடுத்துச்

* பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு.

† நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

‡ அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

சிறுமையைத் தருமென்பதும், பிறர்மனைவியை விரும்புவோன் நீங்காத குடிப்பழியை யடைவானென்பதும், பகை பாவம் அச்சம் பழி இந்நான்கும் அவனைவிட்டு நீங்காவென்பதும், பிறன் மனையை விரும்பாதவனே இல்வாழ்வா னென்னப்படுவானென்பதும், பிறர் மனைப் புகாமையே பெரியோர்க்கு அறமென்பதும், பிறர் மனையைச் சேராதவரே நன்மை யடைதற் குரியா ரென்பதும், அறஞ் செய்யாது பாவத்தைச் செய்யினும் பிறர்மனையை விரும் பாமை நன்மை யென்பதும், பிறவும் பெறப்பட்டன.

---

## ஆயுர்வேத வைத்தியப் பகுதி.

---

## சுக்கு.

(வெண்டாமரை எ, இதழ் க, 8 - ம் பக்கத் தொடர்ச்சி.)

15. தோல்போக்கிய சுக்கை இடித்து வஸ்திரகாயம் செய்த சூர ணம் பலம் ஒன்று, கெட்டிமிளகு இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பலம் ஒன்று, இடித்து வஸ்திரகாயம் செய்த சோம்பு என்னும் பெருஞ் சீரகச் சூரணம் பலம் கால், ஏலக்காயை உரித்தெடுத்த ஏலரிசியை இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பலம் அரைக்கால், வஸ்திரகாயம் செய்த நற்சீரகச் சூரணம் பலம் அரைக்கால், சாம்பிராணிப்பூ என்னும் சாம்பிராணிப் பதங்கம் பலம் அரைக்கால், உயர்ந்த பச்சைக்கற்பூரம் களஞ்சி ஒன்று, உயர்ந்த குங்குமப்பூ களஞ்சி இரண்டு, உயர்ந்த கஸ்தூரி குன்றிமணி எடை மூன்று. இவற்றைக் கூட்டி வெள்ளைப் புளிப்பு மாதுளம் பழ ரசத்தால் பன்னிரண்டுமணிநேரம் அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலிலுலர்த்தி, நன்றாக உலர்ந்தபின், தாழம்பூவின் மடல்களை ஆறு அங்குல நீளமுள்ளவைகளாகக் கத்தரித்து அவற்றினுள் மேற்படி மாத்திரைகளை ஒன்றின்மேல் ஒன்று படாமல் தனித்தனியாக 10, 20, கொண்டவரையில் வைத்து மடித்து, ஒவ்வொரு மடலின் மேலும் மற்றொரு மடலை வைத்து மூடி நூலால் மிருதுவாகக் கட்டி, ஒன்றன் மேலொன்றாக வைத்து அடுக்கி அதன்மேல் சுத்தமான மெல்லிய வெள்ளைத்துணியை ஒருசுற்றுச்சுற்றிப் பதினைந்துநாள் வைத் திருந்து பிறகு எடுத்து, தாழை மடல்களை நீக்கி, ஒரு நாள் மாத்திரை களை நிழலிலுலர்த்தி, சுத்தமான சீசாவில் பத்திரப்படுத்தி வைத்துக்

கொள்ளவும். இரவில் படுக்கையின்போது அவரவர் தேக சுபாவப்படி ஒன்று முதல் மூன்று மாத்திரை வரையில் உட்கொண்டு, காய்ச்சிக் கற்கண்டு சேர்த்த பாலாகிலும் வெந்நீராகிலும் சாப்பிட்டுவரலாம். அல்லது தாம்பூலத்துடன் போட்டுவரலாம். இதனால் வாத, பித்த, கபங்கள் தந்நிலை மாறா.

## குறிப்பு.

(1.) இதனுடன் உயர்ந்த கோரோஜனை ஒருகளஞ்சி சேர்த்து அரைத்துக்கொண்டால், மிக்க பலன் தரும். குழந்தைகளுக்குக் காணும் பலவித மாந்த, கண, ரோகங்கள் தீரும்.

(2.) சாம்பிராணிப் பதங்கம் செய்யத் தெரிந்தவர்களைக்கொண்டு பசுவின் நெய்யால் எரித்தெடுப்பது சர்வ சிலாக்கியம். முடியாதவர்கள் கடையில்விற்கும் சாம்பிராணிப்பூவை வாங்கிப் போட்டுக்கொள்ளலாம். ஆனால் கால் பலம் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(3.) தாம்பூலம் தரிக்கையில் எப்போதும் காம்பு, நுனி, நரம்பு, பின்தொலி இவற்றை நீக்கிய இளசான வெற்றிலையை முன்னதாகவும், பாக்கைப் பின்னதாகவும் உபயோகிக்கவேண்டும் என்பது முன்னோர் முறை. முன்னதாகப் பாக்கை வாயிலிடுவதால் பலவித மந்த, வாயு ரோகங்களும், சிலசமயம் மாரடைப்பும் உண்டாகும். சில தேகிகளுக்குச் சமயாசமயங்களில் ஆபத்தை விளைத்ததாகவும் சொல்லுவதுண்டு. ஆகவே முதலில் மேற்கூறியபடி சுத்திசெய்த வெற்றிலையை அதிகமாகவும், பிறகு பாக்கை (பூச்சிக்கூடு முதலிய தில்லாமல் சுத்தமாய்ப் பார்த்து)க் குறைவாகவும், கிளிஞ்சில் அல்லது கல்சுண்ணும்பை மிதமாகவும் இரவில் போட்டு, முதல் இரண்டு முறை வாயில் சுரக்கும் விஷத்தன்மையுள்ள குற்றமான நீரைத் துப்பிவிட்டு மூன்றாமுறை சுரக்கும் சுத்தமான நீரையே விழுங்கவேண்டும்.

புகையிலையைத் தாம்பூலத்துடன் தரிக்கும் கெட்ட வழக்கம் நமது நாட்டில் பலருக்குண்டு. தேவாமிர்தத்தை யொத்த கிரமமான தாம்பூலத்துடன் எக்காரணத்தை முன்னிட்டும் எப்போதும் புகையிலையை உபயோகிக்கவே கூடாது. புகையிலையைப் பற்றி நமது ஆயுர்வேத வைத்திய சாஸ்திரங்களில் ஒருசிறிய குணமும் சொல்லப்படவில்லை. குணத்தைப்பற்றிச் சொல்லப்படாவிட்டாலும் மற்ற வஸ்துக்களைப்போல் நன்மை தீமை இரண்டையும் கலந்து சொல்லப்பட்டிருப்பினும் ஒருவாறு பொருந்து மெனலாம். ஒவ்வொரு வஸ்துவைப்பற்றியும் (குணபாடம்) தனிக்குணம் சொல்லிவந்த தேரைய மகாமுனிவர் முதலில்

குணத்தையும், பிறகு குற்றத்தையும் கூறிவந்தவிடத்து இப்புகையிலையைப்பற்றிக் கூறுங்கால் :—

### வெண்பா.

மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யும்
திருந்து பலவீனஞ் சேர்ப்பிக்கும்—பொருந்துபித்தம்
உண்டாக்கும் விந்தழிக்கும் ஓது புகையிலையைக்
கண்டார்க்கும் ஆகாது காண்.

---

கண்புகையும் நெஞ்சுலரும் கைகா லசந்துவரும்
வெண்புகையு மேனி வெளுக்குமே—பண்பாய்க்கேள்
ஈரல் கருகிவரும் இந்திரிய நஷ்டமாம்
பாரில் புகையிலையின் பண்பு.

---

என்று ஆதிமுதல் அந்தம்வரை குற்றங்களையே ஒன்றன்பின் ஒன்றாய்த் தொகுத்துக் காட்டியுள்ளார். இதைப்பற்றிய மற்ற விவரங்களெல்லாம் புகையிலையைப்பற்றிப் பின்னல் எழுதப்போகும் தனி வியாசத்தில் குறிப்பிடப்படும். எனவே புகையிலையைத் தனியாகவோ, வாசனையூட்டியோ, பொடி, சுருட்டு, பீடி, சிகாரெட்முதலிய செயற்கை யினங்களாகவோ, எவ்வகையாலும் உபயோகியாதிருப்பது நலம். மனித தேகத்தின் முக்கிய உறுப்பாகிய தலையின் மூளைக்கும், எழுபத்தீராயிரம் நாடிகளுக்கும் பல வீனத்தை உண்டாக்கி அதனுல் பற்பல தொந்த வியாதிகளை உற்பத்தி செய்து, அவற்றை மேன்மேலும் விருத்தியாக்கி, இராஜ கருவிகளையும், ஜீரண உறுப்புகளையும் மழுங்கச்செய்து, மகிமைபெற்ற அருமையான திவ்ய ஔஷதங்களுக்கும் வசப்படாமல் தீராத ரோகக்கூட்டங்களுக்கே தேகத்தை இரையாக்கும் துர்க்குணமுள்ளதென்றும், ஆகவே எவ்வித சந்தர்ப்பத்திலும் புகையிலை சம்பந்தமான எந்த வஸ்துவையும் கையினுலும் தொடக்கூடாதென வற்புறுத்திக் கூறுகின்றனர் நமது மூதறிவாளராகிய மகான்கள்.

16. எலுமிச்சம்பழரசம் பலம் பத்து, இந்துப்பு பலம் ஒன்று. இந்துப்பைத் தூளாக்கி எலுமிச்சம்பழரசத்தில் கலந்து மண்பாத்திரத்தில் விட்டு, அதில் முழுகும்படி தோல் போக்கிய சுக்கைக் கடலையளவு துண்டுகளாக்கிப் போட்டு வெய்யிலில் உலரவைக்கவும். நன்றாய் உலர்ந்த பின் முன்போல் உப்புக் கலந்த எலுமிச்சம்பழ ரசத்தை முழுகவிட்டு உலரவைக்கவும். இப்படி எழுமுறை உலரவைத்துப் பின் கொஞ்சம் நெய்

விட்டுப் பொன்னிறமாய் வறுத்து ஆறவைத்துக் காற்றுப் போகாமல் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

ஆகாரத்தின் பிறகு வேண்டும்போது ஒன்றிரண்டு துண்டுகளை வாயிலிட்டு அடக்கி அந்த ரசத்தை விழுங்கிவருவதால், வாய்நீர் ஊறல், குமட்டல், வாந்தி, ஏப்பம், அரோசகம், மந்தம், பித்தவாயு, மந்தவாயு, வயிற்றுப்புளிப்பு, அஜீர்ணபேதிகள், உஷ்ணவாயுவால் உண்டாகும் பிடிப்புகள், இழுப்புகள், வயிற்றுவலி, வாந்திரோகம், மார் எரிச்சல், விடியற்காலையில் உண்டாகும் நெஞ்செரிச்சல் முதலியன தீரும்.

குறிப்பு.

எலுமிச்சம்பழ ரசம் ஒருபலமானால் இந்துப்புத்தூள் ஒருவிராகனெடைவீதம் கலந்து கொள்ளவேண்டும். சுக்குத் துண்டுகள் நன்றாய் நனையக்கூடிய அளவு ஷெ உப்புக்கலந்த எலுமிச்சம்பழரசம் விடவேண்டும்.

எலுமிச்சம்பழ ரசம் எடுக்கும்போது, காயல்லாமல் நன்றாய்ப் பழுத்த மஞ்சள்நிறமான தேர்ந்த பழமாகவே இருக்கவேண்டும். பசுமை நிறமான காயின்ரசம் நெஞ்சைக் கட்டிக் கோழையை உண்டாக்கும். சிலசமயம் கபவியாதியை அதிகப்படுத்திச் சீதளரோகங்களை வியாபிக்கச்செய்து அபாயத்தையும் விளைக்கும். ஆகையால் மஞ்சள் நிறமுள்ளதும் நன்றாய் முற்றித் தேறியதுமாகவே பார்த்து எடுக்கவேண்டும். இவ்விதமான நல்ல பழங்களைக் கொதிக்கும் வெந்நீரில் இரண்டொரு நிமிஷம் ஊறவைத்து எடுத்துத் துடைத்து (கசக்காமல்) இரண்டாக அறுத்துப் பின்பக்கமாய்த் திருப்பிக்கொண்டு பிறகு ரசம் பிழிந்து துணியில் வடிகட்டிக் கொள்ளவேண்டும்.

பழத்தைக் கசக்குவதால் தோலிலுள்ள கசப்பும் விறுவிறுப்பும் கலந்த சத்தும், எண்ணெய்ப் பசை போன்ற திரவமும் பழத்துடன் சேர்ந்து ரசத்தின் குணத்தை மாற்றி எதிர்பார்த்தபடி நன்மையைச் செய்யாது. ஒவ்வொன்றாய்ப் பின்பக்கம் திருப்பிப் பிழிந்துகொள்ள அவகாசம் நேராத அவசர நேரத்திலுங்கூட, பழத்தைக் கசக்காமலே அறுத்துப் பிழிந்துகொள்வது ஆயுர்வேத வைத்திய லக்ஷண உத்தம முறை.

(இன்னும் வரும்.)

அ. வேங்கடாசல முதலியார்,
ஆயுர்வேத வைத்தியர்,
திருவண்ணாமலை.

# பொய்யாமொழிப் புலவர் சரிதம்.

(வெண்டாமரை எ, இதழ் க, 12-ம் பக்கத்தொடர்ச்சி.)

"தாய் தந்தையரிருவரும் தமது அருந்தவப் புதல்வராகிய பொய்யா மொழியின் புலமைத் திறத்தினைக் கேட்டு,

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய் "
" சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே "
" சான்றோரென்கை யீன்றோர்க் கழகு "

என்னும் இலக்கணத்துக் கொத்துப் பெருமகிழ்வு கொண்டாடினர். (இது தொடங்கி யிவர் மதுரைப் பிரயாணம் வரை, யாதொரு வரலாறும் தெரிவதற்கில்லை )

காளியின் திருவருள் பெற்றுக் கவிஞர் சிகாமணியாய் விளங்கிய இவர், மதுரைமாநகரில் பாண்டிய மன்னர்களால் செந்தமிழறிஞர்களில் சிறந்தோரைக் கூட்டி நன்கு பரிபாலித்த தமிழ்ச்சங்கம் மூன்றும் நிலைகுலைந் தழிந்து ஒழிந்ததை யுணர்ந்து மீண்டும் அதனைப் புதுப்பித்துத் தமிழை வளம்படுத்த ஆவல்கொண்டு,

" சந்தனப்பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு
மங்கலப் பாண்டி வளநாடு "

காணத் தொண்டை நாட்டினின்றும் வழிக்கொண்டனர். இடையிலுள்ள சைவசித்தாந்த பிரசாரகராம் தாயுமானப் பெருந்தகையார் அவதரித்த திருத்தலமாகிய திரிசிராப்பள்ளியை யடைந்து சில நாள் தங்கியிருந்தபோது, புலவர்பால் கவிபெற்றுக் களிக்க விரும்பிய " பாட்டுக்குவந்தருளும் பரமேட்டி " ஓர் புலவர் வேடம் புனைந்து பொய்யா மொழியை யணுகித் தமிழ் விஷயமாகச் சில வாது நிகழ்த்தி,

* கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புக மடக்கும்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை. (தமிழ் நாவலர் சரிதை)

* முதலுங் கடையுஞ்சேர்க்க, கோட்டுமலை—யானை.

காட்டானை தனது கொம்பினால் தேன்கூட்டைக் குத்தி அந்தத் துவாரத்தின் நேரேயே தனது பொருந்து தலையுடைய பனைபோலும் துதிக்கையை நீட்டி அங்கிருந்து வழியும் தேனாகிய நீரைக் குடிக்கும் (மலை வளம்) செழுமை வாய்ந்த திரிசிராபள்ளி மலையே "கங்காதரனது மலை" எனப் பொருள்தரும் கவியைக் கூறி, தாம் விரும்பி யுறையும் திருத்தலம் இஃதெனப் புலவர்க்குணர்த்தி மறைந்தனர்.

புலவர் கடவுளின் திருவிளையாடலுக்குப் பெரிதும் அதிசயித்து மலைமேல் கோயில்கொண்டருளும் மாதுருபூதேசுரரை வணங்கித் தொழுது அப்பெருமான்மீது,

"புலித்தோலை உடையாக அழகிய அரையிலுடுத்திப் பாம்பையும் கூனலான சந்திரனையும் ஆபரணமாகக் கொண்டருளிய சிவபெருமானுக்கு வாசஸ்தானமாவது, திரண்ட வாள்போற் கூரிய பற்களையும் கொடிய பார்வையையுமுடைய புலிகளை அப்பாற் போகவிடுத்து யானைகளின் வருகையையே விரும்பிப் பலவிதமாக எதிர்நோக்கித் தனித்தனிச் சிங்கங்கள் பதிவிருக்கின்ற திரிசிரா மலையேயாம்" என்னுங் கருத்துத் தோன்ற,

* அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே."

(தமிழ் நாவலர் சரிதை. 61)

எனப் பாடித் துதித்தனர். பின்னர்த் திரிசிராப்பள்ளியைவிட்டு நீங்கி மதுரையை நோக்கிப் பிரயாணங்கொண்டார்.

வழியிலுள்ள பாலைவனத்தை வெகு இளைப்புடன் கடக்கும்போது முன்னர், ஓர் குகனடியார் தம்மை யடுத்து, முருகப்பிரான்மீது ஓர் பிரபந்தம் பாடித்தரும்படி கேட்க, சிவகவியாகிய பொய்யாமொழிப் புலவர், சிவபெருமானை யன்றிப் பிறரைப் பாடுவ தில்லையென்றும், சிவனாகிய சேவற்கு ஒரு குஞ்சுபோன்ற குமரனைப்பாடுதல் இயலாதென்றும் கூறிய போது, அவ் வடியார் மிகவருந்தி, இவ்விஷயத்தைக் குமரகோட்டஞ் சென்று சந்நிதியின் முன்னின்று, "புலவன் மொழிந்த தூஷணத்தைப் பொறுக்ககில்லேன், அவன் அகங்காரத்தைப் போக்கியருளல் வேண்டும்" என்றிரந்தனர். குமரவேளும் அவ்வாறே யாக வென்று அறிவித்துச் சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். அச்சமயம் இப்பொழுது நேர்ந்தபடியால்,

* முதலுங் கடையுஞ் சேர்க்க, அங்கமலை—பிரானை.

குமாரக்கடவுள்பொய்யாமொழிப் புலவரைத்தடுத்தாட்கொள்ள விரும்பித் திருக்கரத்திலே வேலும் வில்லும் அம்புகளுங் கொண்டு, காலிற் செருப் பணிந்து கார்மேகம் போல வேகமா நடந்து ஆர்ப்பரித்து ஓர் வேடராக வந்தார். வேடுவச்சியை விரும்பிச்சேரும் வேலவனுக்கு வேடுவக்கோலம் புனைதல் இயல்புதானே. இக் கோலங் கண்ட புலவர் திடுக்கிட்டஞ்சி, இனி யாது நேருமோ வென்று கருதி அயர்ந்து நின்றனர். சமீபத்துச் சேர்ந்த வேடமூர்த்தி, 'நீ யாவன் ?" என வினவ, பொய்யாமொழியார், 'புலவன்' என்றார். வேடனாகிய வேலவன், இளநகையரும்பி, "புலவன் என்னும்பெயர் குறிஞ்சித்தெய்வமாகிய சேவ்வேள் தனக்கு எற்குமேயன்றி மற்றையோருக்குப் பொருந்துமோ ? ஒரு சிறிது அத்தெய்வத்தின் மாணவன் ஆகிய அகத்தியர்க்குஞ் சேரும். நீ புலவன் என்று மொழிவது எமக்கு வியப்பாகவே தோன்றுகிறது. ஆயினும், கவிபாடும் பாவலரையும் புலவர் என்பதுண்டு. உனக்குக் கவிபாட வருமோ ?" என்றனர்.

புலவர்க்கு இச்சொல் காதிற்பட்டதும் தம்மைக் கவர்ந்திருந்த அச்சம் ஒருவாறு நீங்கி, தமிழறிவுடைய இவனால் நமக்கு இறுதி நேராதெனத்தெளிந்து துணிவும் சந்தோஷமும் தோன்ற,'பாடுவேன்' என்றார். "ஆயின், என்பெயரும், இந்நிலமும், சுரம்போக்குத் துறையும் அமைய வெண்பாவில், 'பொன்போல்' என்று தொடங்கி முடித்தி" என்றார். புலவர், 'உன்பெயர் என் ?" என்றார். வேட்டுவக் குமரன், (குஞ்சைப் பாடேன் என்றவன் குஞ்சினும் தாழ்ந்ததாகிய முட்டையை இப்போது பாடட்டும் என்றுட்கொண்டு) 'என்பெயர் முட்டை' என்றனர். உடனே, புலவர் சுரம்போக்குத் துறையில்,

"மின்னலை யொத்த பெருமை தங்கிய வேலாயுதத்தை யேந்திய முட்டை என்பவனுக்கு மாறுபட்ட பகைவர் போகிற காட்டு வேலமுள் தைக்கின்ற காட்டில், கள்ளிமரத்தினின்று பொன்போலும் தீப்பொறி பறக்கின்ற கானவேனிலிலே எனது பேதைப்பருவத்துப் பெண் செல்ல மனமிசைந்தாளே" என்னும் பொருள்பட,

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு. (தமிழ் நாவலர்சரிதை 60)

என்றுபாடினனர்.

(தொடரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

# திருவாசக ஆராய்ச்சி.

(வெண்டாமரை ௬, இதழ் ௧௧, 257-ம் பக்கத் தொடர்ச்சி.)

'வின்ஸண்ட்ஸ்மித்' மேலும் கூறுகிறார். "இலங்கை மன்னனைச் சைவனாக்கியதைப்பற்றி யாவது, அவ்விலங்கை மன்னனே கோதகாபாயன் என்பதைப்பற்றியாவது நாம் எவ்வளவுதான் நம்பாவிட்டாலும், மாணிக்கவாசகர் மலையாளம் சென்று இரண்டு கிறித்தவ குடும்பத்தினரைச் சைவராக்கினார் என்ற கர்னபரம்பரைக் கதையை உண்மை எனக் கொள்ளப் பின்வாங்குதற்குக் காரணம் ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை. மணிக்ராமகர்கள் எனப்பெறும் அந்தக் குடும்பத்தினர்க்கு இப்போதும்கூட ஹிந்துக்களது உரிமைகள் எல்லாம் கிடையா. சில கதைகளின் பிரகாரம் இஃது நடந்த காலம் கி. பி. 270. அந்தக்காலம் சரியானதானால் மலையாளத்துக் கிறித்துமதம் மிகப் பழையதாகும். தமிழ் இலக்கியங்களில் நின்றும் எடுத்துக் காட்டப்பெறும் அத்தாட்சிகளின் பெருமையை யான் பாராட்டக்கூடியவரை, மாணிக்கவாசகர் கி. பி. 3-ம் நூற்றாண்டில் இருந்தார் எனக்கூறப் பல காரணங்கள் இருக்கின்றன. சில ஆசிரியர்கள் 2-ம் நூற்றாண்டின் முதலில் இருந்தார் எனக்கூறுவர். மகா. ள-ள-ஸ்ரீ திருமலைக்கொழுந்து பிள்ளை B. A. அவர்கள் தமது "மாணிக்கவாசகரது காலம்" என்ற ஆங்கில நூலில், மாணிக்கவாசகர் சங்கக்காலத்தவர் என்கின்றார்.

அவர், கி. பி. 6-ம் நூற்றாண்டில் இருந்த திருஞான சம்பந்தர்க்கு முன்னரே மாணிக்கவாசகர் இருந்தார் என்று நிரூபணம் செய்யக் கீழ் வரும் காரணங்களைக் கூறுகிறார்.

தென்னிந்தியாவில் புத்தமதம் தலைசாய்ந்த பிறகே ஜைனமதம் மறைந்தது. ஆகவே புத்த மதத்தை ஓட்டிச் சைவமதத்தை நிலைநாட்டிய மாணிக்கவாசகர் ஜைனமதத்தினரை வாதில் வென்ற திருஞானசம்பந்தருக்கு முன்னாதல் ஒருதலை.

திருவாசகத்தின் நடை சங்கநடைபோல் தோன்றுகின்றது. உரையாசிரியர்கள் எல்லாம் தேவாரத்தினின்றும் மேற்கோள் எடாமல் திருவாசகத்தினின்றும் மிகுதியும் எடுத்தாள்வது திருவாசகத்தின் பழமையைக் குறிப்பதாகும்.

அப்பரும் திருஞான சம்பந்தரும் ஒரே காலத்தவர்; அப்பர் தமது பாடலில் நரி பரி ஆக்கிய திருவிளையாடலைக் குறிக்கின்றார். ஆதலால் மாணிக்க வாசகருக்குப் பின்னவர் ஆவர்.

மதுரைப் புராணங்களும் கர்ன பரம்பரைக் கதைகளும் மாணிக்க வாசகர் திருஞான சம்பந்தருக்கு முந்தியவர் என்னும் கொள்கையை நிலைநாட்டுகின்றன. திருவிளையாடல் புராணத்தின்படி மாணிக்கவாசக ருக்கும் சம்பந்தருக்கும் இடையிட்ட காலத்தில் 10 பாண்டியர்கள் ஆண் டார்கள்.

அப்பர் எப்பொழுதும் திருவாசகத்தைத் தமது கையிலேயே வைத்திருந்தார் என்று உலக வழக்கில் ஒரு கதை வழங்கிவருகின்றதே. அப்பரது பக்திநிலை மாணிக்கவாசகரது பக்தி நிலையைப் பின்பற்றிய தென்றும் கூறுகின்றனர்.

அப்பரது பாடல்களில் திருவாசகத்தின் மாறொலிகள் பல கேட் கலாம். (பிள்ளையவர்கள் தமது நூலின் 21, 22, 23, 24-ம் பக்கங்களில் திருவாசகத்திலும் அப்பர் தேவாரத்திலும் உள்ள ஒத்த பகுதிகளை எடுத் துக் காட்டுகின்றார்.)

ஆகவே மாணிக்கவாசகர் சம்பந்தருக்கு முந்தியவர் ஆவர். ஆனால் தேவாரத்தில் மணிவாசகரது பேர் ஏன் காணப்படவில்லை என்றால், இப் போது நாம் பல தேவாரப் பதிகங்களைக் காணக்கூடாமையாலே என்க. மாணிக்கவாசகர் மூவருக்குப் பிந்தி இருந்திருப்பாரானால் அவர்களைப் பற்றித் தம் நூலில் குறியாது போவாரா?

பிறகு, பிள்ளையவர்கள் மாணிக்கவாசகரது நூல்கள் ஏன் முதல் திருமுறையாகச் சேர்க்கப்படவில்லை என்பதைப்பற்றி ஆராயப்புகுந்து கீழ்வரும் முடிவு கட்டுகின்றார்.

தேவாரத்தைப்போல் திருவாசகத்தை யாழோடு பண்ணிற்குச் சரியாகப் பாட முடியாது. சம்பந்தர் இடக்கு முடக்கான சீருடைய பாடல்களை எல்லாம் தண்ணீர்ப்பாடமாகப் பாட வல்லவர் ஆனதால் அவரை ஒரு பெரும்புலவர் என்னலாம். திருமுறை தொகுத்த நம்பி யாண்டார் நம்பியின் மனதில் தமக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்த தேவார ஆசிரியரது நினைவே அதிகமாய் இருந்தது இயற்கையே. அன்றியும் மாணிக்கவாசகர் மூவர்களைப்போல் அத்துணை அதிசயங்கள் செய்யவில்லை. அதனால் திருமுறை தொகுத்த காலத்தில் ஜனங்கள் மூவரைப்பற்றியே அதிகம் எண்ணி இருப்பார்கள். அல்லாமலும் நம்பி

யாண்டார் நம்பி, திருவாசகத்தின் மனமுருக்கும் பெருந்தன்மை நோக்கி, தேவாரம் படித்தபிறகு படித்தற்குரியது என்பதைக் குறிக்க வைத்தார் என்பர் சில சைவர். எவ்வாறாயினும் திருமுறைகள் கால முறையாகத் தொகுக்கப் பெறவில்லை என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்ததாகும்.

பின்னர், திருத்தொண்டத் தொகையில் சுந்தரர், ஏன் மாணிக்க வாசகரது பெயரைக் குறிக்கவில்லை என்ற ஆசங்கை எழுப்பி, சுந்தரர் குறித்தே உள்ளார் என்று முடிவு செய்கின்றார். 'பொய்யடிமையில்லாத புலவர்' என்ற தொடர் சங்கப்புலவரைக் குறிக்கின்றது என்பது கற்றோரது கருத்து. சங்கப்புலவரில் மாணிக்கவாசகரும் ஒருவர் ஆதலின் அவரை வேறாகச் சுந்தரர் குறிக்கவில்லை என்கிறார்.

சங்கம் ஒன்று பழையகாலத்தில் இருந்தது என்று நிலைநாட்டி, அவ்வாறு ஒன்று இல்லை எனக்கூறும் சென்னை இராஜதானிக் கலாசாலை ம. ஈ-ஈ-ஸ்ரீ சேஷகிரிசாஸ்திரியாரை மறுக்கின்றார். சங்கக் காலத்துப் புலவராகிய கல்லாடர், தாம் செய்த நூலாகிய கல்லாடத்தின் 49-வது அகவலில் வலைவீசிய திருவிளையாடலைப்பற்றிக் குறித்திருக்கிறார். அத் திருவிளையாடல் மாணிக்கவாசகரது காலத்தில் அரசனாய் இருந்த அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் நடந்ததாகும். அன்றியும் மண்சுமந்த திருவிளையாடலைப் பற்றிக் கல்லாடர் பாடியிருக்கின்றார். மாணிக்க வாசகர்க்காக அன்றோ பரமன் மண்சுமந்து பிரம்படி பட்டது? ஆகவே கல்லாடர் காலத்திற்கு முந்தியாவது அல்லது அவரது காலத்திலாவது மணிவாசகர் இருந்திருக்க வேண்டும் என ஏற்படவில்லையா?

ஆனால் அரிமர்த்தன பாண்டியன் என்ற அரசன் பெயர் சங்க நூல்களில் காணக் கிடைக்கவில்லையே என்றால், வடநூல் புராணாசிரியர்கள் தமிழ்ப்பெயரை எல்லாம் மொழிபெயர்த்து எழுதுவது வழக்காதலின் அரிமர்த்தனன் என்னும் அத்தகைய மொழிபெயர்ப்புப்பெயர் எவ்வாறு அகப்படும் என்க.

பிற்காலத்து நூல்களில் எல்லாம் திருக்குறளின் சீரும், அடியும் நிறைந்து கிடக்கத் திருவாசகத்தில் மாத்திரம் அவ்வாறு இல்லாமல் இருப்பது திருவாசகத்தின் பழமையைக் குறிக்கவில்லையா என்று ஆராயவேண்டும் என்றும், வாதவூரர் சங்கக்காலமாகிய கி. பி. முதல் நூற்றாண்டினர் என்றும் கூறித் தமது நூலை முடிக்கின்றார்.

**தென்பட்டினம் - மீனாக்ஷிசுந்தரன்.**

## கமலாக்ஷி (ஒரு நாவல்) சொல்வது.

### பெண் கோள்ளல்.

(வெண்டாமரை எ, இதழ் க, 16 - ம் பக்கத் தொடர்ச்சி.)

**சோமசுந்தரம் :—** ஒன்றுங் காணப்படவில்லை.

**விஜயரங்கம் :—** இனி நம்முன்னோர்கள் செய்திருக்கும் முறைமையைக் குறித்து யோசிக்கலாம். நமக்குப் பெண்தேடி விவாகத்தை முடித்துவைப்பது நமது தாய் தந்தையரே. விவாகம் என்றால் அது இன்னதென்று அறியாத சிறுபிராயத்தில் விவாகம்முடிந்துவிடுகின்றது. நாம் சகோதர சகோதரிகளோடு விளையாடி ஒருவரையொருவர் நேசிப்பதுபோல், சிறு பிராயத்தில் விவாகமுடிந்த சிறுவர்களும் நேசித்துப் பருவமடைந்தால் அவர்கள் ஒருவரையொருவர் நேசித்திருக்கக் கேட்க வேண்டுமா?

**சோம :—** குழந்தைப் பருவத்தில் விவாகம் முடிப்பதும் அதனால் வரும் கெடுதியும் பார்த்துச் சகிக்கக்கூடியதா?

**விஜய :—** எந்த விஷயத்தில்?

**சோம :—** பால்குடித்துப் பல்தேயுமுன் சிறுவர்களுக்கு விவாகஞ் செய்வதால் வருங் கெடுதியை அறியார்போல் கேட்கிறாய்? விவாகம் முடிந்தவுடன் பிள்ளையிறந்தால் பெண்ணின் கதியென்ன? பெண்ணுக்கு மணத்தைத் தந்ததால் வந்த லாபந்தானென்ன? அவள் தன் காலத்தையெல்லாம் கைம்பெண்ணாயிருந்து கழிக்கவேண்டியவளே யன்றி யென்ன சுகத்தை யனுபவித்தவளாகிறாள்?

**விஜய :—** வாலிபதசை யடைந்தபின் விவாகம் முடிந்து அன்றிரவே மாப்பிள்ளை யிறந்தால் பெண்ணின் கதி யென்ன? இரண்டும் ஒன்றேயல்லவா? அவரவர்கள் வினைக்கீடாக நடப்பதைத் தடுக்க யார் வல்லவர்.

**சோம :—** நீ முன் சொல்லியவண்ணம் சிறுபிராயத்தில் விவாகமாவது பிராமணர்களுக்குள்ளும், தனவந்தர்களுக்குள்ளும் நடப்பதேயன்றி எளியவருள் அதிகமாய் நடப்பதை நாம் காணவில்லை. அவர்களுக்கு இச்சை யெப்படி யுண்டாகும்?

**விஜய :—** நம்மவர்களுக்குள் விவாகம் நடப்பது நெருங்கிய பந்துக்களுக்குள்ளன்றி அன்னியர்களுக்குள் அல்ல. பிள்ளையின் பெண்

ணின் தாய்தந்தையர் சிறுபிராயத்தில் குறிப்பிட்டு வருவதே யன்றிப் பிள்ளையின் பெண்ணின் குணத்தையும் நடத்தையையும் நாளடைவில் கவனித்தும் வருகிறார்கள். பிள்ளையும் பெண்ணும் சந்திக்கும்படி நேரிட்டகாலத்தில் தங்கள் சம்மதத்தைச் சிறுபிராயத்தில் கேட்டுக் கொள்ளுகிறார்கள். மற்றச் சிறுவர்கள் "இதோ உன்புருடன்" "இதோ உன் பெண்சாதி" என்று கூட்டும்பொழுது உண்டாகும் குறிப்பினால் சிறுவர்கள் சம்மதத்தைத் தாய்தந்தையரும் மற்றவர்களும் அறிந்துகொண்டு விவாகம் ஆகுங்காலம் சமீபித்தபோது பெண்ணின் பிள்ளையின் சினேகிதர்களால் அவர்கள் கருத்தை யறிந்து விவாகத்தை முடிக்கிறார்கள். சம்மதம் இல்லாமையைக் கண்டால் வேறு பெண் தேடியாவது வேறு நாயகனைத் தேடியாவது விவாகத்தை முடிக்கிறார்கள்.

**சோம:—** இதெல்லாம் நீ சேர்த்துச் சொல்லுகிறதேயன்றி எங்கு இவ்விதம் நடக்கிறது! முதலாவது ஒரு பெண் "அந்த மாப்பிள்ளை யெனக்குவேண்டா, வேறு மாப்பிள்ளையைப் பாருங்கள்" என்று சொல்லுவாளா? தாய் தந்தைக்கு அடங்கிய பிள்ளை "எனக்கு அந்தப் பெண் வேண்டா, வேறு பெண்பார்த்து விவாகம் செய்யுங்கள்" என்று சொல்லுவானா?

**விஜய:—** நீ சொல்லும்விதம் சொல்லாமல் புருடனைச் சம்மதிக்காதபெண் "எனக்கு விவாகம் வேண்டா. நான் எந்தமதிலேறிக்குதிக்கிறேன். எனக்குக் கலியாணம் செய்யப் பந்தல் போட்டால் அன்றே ஓர் ஞாத்தில் குட்டையில் விழுந்துவிடுவேன்" என்றும், பிள்ளை, "எனக்குக் கலியாணம் முடித்துவைக்க யாரிடத்தில் சொன்னேன். எனக்குக் கலியாணம் என்றால் அன்றே தேசாந்தரம் போய்விடுவேன்" என்றும் சொல்லுகிறார்கள் என்பதையாகிலும் கேட்டிருக்கிறாயா?

**சோம:—** சிரித்துக்கொண்டே, ஆம் ஆம் கேட்டிருக்கிறேன். பந்துக்களுக்குள் நடக்கும் விவாகம் சிறப்புடையதாயினும் காட்டில் சென்று மாட்டை விலைக்கு வாங்கி வருவதுபோல ஒரு பெண்ணைக் கொண்டு வருகிறார்களே! அதற்கென்ன சொல்லப்போகிறாய்?

**விஜய:—** "அன்னிய சம்பந்தம் அபூர்வம்" என்று முன்னதாகவே சொல்லியிருக்கிறேன். அன்னியர்களிடத்தில் பெண் தேடுவோர் படுங் கஷ்டத்தைச் சுருக்கிச்சொல்லவே "பய்யனுக்குப் பெண் கொண்டுவரப் பத்து செருப்புத் தேய்ந்தது" என்று சொல்லும் வார்த்தை உமது காதில் விழுந்திருக்கிறதா? பத்துச்செருப்பு எப்படித் தேயும்? எத்தனை தடவை பெண்வீட்டிற்குப் போயிருப்பார்கள்? பெண்ணின்

குணத்தையும் நடத்தையையும் நேரிலும் மற்றவர்களாலும் அறிய அல்லவா அநேக முறை போகிறார்கள். பெண்ணை மிகக் கவனித்துப் பார்க்கிறார்கள்.

**சோம :—** அன்னியர்களிடத்தில் பெண் கொண்டுவருகிற கஷ்டத்தைச் சொன்னாயேயன்றிக் கொண்டுவந்த பெண்ணின்மேல் இச்சை எவ்விதம் உண்டாகுமென்று சொல்லவில்லை. ஆனதால் அன்னியர்களிடத்தில் உண்டாகும் சம்பந்தத்தால் இருவருக்கும் இச்சை யுண்டாகாதென்று தெரிகிறது.

**விஜய :—** அவசரப்பட்டு அவ்விதம் சொல்லவேண்டா. அன்னிய சம்பந்தத்தில் ஒன்று கூடிய பெண்ணும் பிள்ளையும் தாங்கள் விவாகம் செய்துகொள்ளவேண்டு மென்கிற விருப்பத்தோடு ஒருவரிடத்தும் வார்த்தையாடாமலிருப்பதாலும், அவர்கள் விவாகத்துக்குமுன் ஒருவரை இச்சித்திராததாலும், இச்சையைக்கொள்ளும் இடம் வெறுமையா யிருப்பதாலும், அழுக்கில்லாத வஸ்திரத்தில் சாயம் ஏறுவதுபோலப் பெண்ணும் பிள்ளையும் அன்னியமாகவிருந்தாலும் பெண்சாதி புருடன் என்ற முறையோடு ஒருவரை யொருவர் கண்டவுடன் இச்சிக்க இடமுண்டாகின்றது. தாய் தந்தையர் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் இச்சையை யுண்டாக்க இருவரையும் அலங்கரித்து ஒருவரை யொருவர் பார்க்கும்படி செய்கிறார்கள்.

**சோம்.—** நீ சொல்வது நியாயமாகவே காண்கிறது. இன்னும் இதுவிஷயத்தைக்குறித்து ஏதாகிலும் சொல்லப்போகிறாயா? நெடுநேரமாக இதைக்குறித்து வாதிட்டுக் கொண்டிருக்கிறோம்.

**விஜய:—** அதிகம் இல்லை. தாமே ஒரு பெண்ணைக்கண்டு வார்த்தையாடி இச்சித்த பின் விவாகத்தை முடித்துக்கொள்ளலா மென்று சொல்லுகிறவர்கள், நம்மைப்போலத் தாய்தந்தை சொல்லுக்குக் கட்டுப்படவேண்டியவர்கள். அவர்கள் சௌந்தர்யத்தை நேரில் அறிகிறார்கள். நாமும் நேரில் அறிகிறோம். பெண்ணின் பிள்ளையின் குணத்தை அவர்கள் தாய்தந்தையரால் அறிவதுபோல், நாமும் தாய்தந்தையரால் அறிகிறோம். அவர்கள் பணத்தைக் கருதித் தங்கள் பெண்ணையோ பிள்ளையையோ கொடுப்பதுபோல, நமது தாய்தந்தையரும் கொடுக்கிறார்கள். அவர்களில் விவாகத்துக்குமுன் பெண்ணைக்கண்டு வார்த்தையாடி இருவரும் தனித்து உலாவப் போகிறதுபோல நம்மவர்களில் இல்லை. அவர்களில் ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளுகிறே னென்று வாக்களித்தபின் விவாகத்துக்குமுன் நேரிடுங் கெடுதிகளும், விவாகம்செய்து

கொள்ளுகிறேனென்ற வாக்குறுதியைக்கொண்டு அவளை வேறொருவர் விரும்பாதவிதம் செய்து அவளைவிட்டுவிடுகிறதும் நம்முன்னோர் செய்திருக்கும் ஏற்பாட்டினால் உண்டாகமாட்டாமையால் நம்மவர்களிடத்தில் அத்தீமை யில்லை. முடிவில் சொல்லுமிடத்து நன்மையானகுணம் இருபக்கத்திலும் இருக்கிறது. தீயகுணம் நம்மவர்களிடம் இல்லையென்று நன்றாய் விளங்குகிறது. பொருள்மேல் விருப்பங்கொண்டு பெண்ணின் பிள்ளையின் மனதுக்கு விரோதமாகச் செய்வதும் நம்முன்னோருடைய கோட்பாடல்ல. அதை நிறுத்தி நம்முன்னோர் கொண்ட கருத்தோடு நடப்போமானால் எல்லாவிஷயத்திலும் மேன்மையுண்டாகும். சுபம்.

ஓர் இந்து.

---

## தேவாரப் பதிகங்கள் ஆராய்ச்சி.

இத்தகைய விஷயம் ஒன்று கலைமகள் வெண்டாமரை 7 இதழ் 1-ல் வெளிவரக் கண்ணுற்றனன். இத்தகைய அரிய ஆராய்ச்சிகள் ஆங்காங்கு உள்ள புலவர்களால் வெளிப்பட்டால் உலகுக்கு உபகாரமாயிருக்கும்.

அடியேனுக்குத் தோன்றிய தொன்றை ஈண்டுக் குறிக்கின்றனன் :—

திருவி னாயக னாகிய மாலுக்
கருள்கள் செய்திடுந் தேவர் பிரானை
யுருவி னானையொன் றாலறி யொண்ணா
மூர்த்தி யைவிச யற்கருள் செய்வான்
செருவில் ஏந்தியோர் கேழற்பின் சென்றும்
சேங்கண் வேடனாய் என்னொடும் வந்தும்
மருவி னான்றனை வாழ்க்கொளிப் புத்தூர்
மாணிக் கத்தைமறந் தென்னினைக் கேனே.

(7-ம் முறை. திருவாழ்க்கொளிப்புத்தூர் 6)

இதன்பொருள் :— இலக்குமி நாயகனாகிய திருமாலுக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கும் தேவதேவனை, ஆன்மாக்களெல்லாம் பூசித்து முத்திப் பேறெய்த உருவத் திருமேனி எடுத்தவனை, அப்படி உருவத் திருமேனி யெடுத்த போதிலும் இதுதான் அவனுடைய திருமேனி என்று கூற முடியா வண்ணம் பல படித்தாக இருக்கும் மூர்த்தியை, பஞ்ச பாண்டவரில் நடுவண் பிறந்த அர்ச்சுனனுக்கு

அருள் செய்யும்பொருட்டுப் போருக்குரிய வில்லை ஏந்திக்கொண்டு ஒரு பன்றியின் பின்சென்றும், சிவந்த கண்களையுடைய வேடரூபமாய் என்னோடுகூட வந்தும் வேண்டும் வரங்களைக் கொடுத்தவனை, திருவாழ்க்கொளிப்புத்தூர் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் மாணிக்கம் போன்றவனை. மறந்துவிட்டு வேறு என்ன நினைக்கப்போகிறேன் ஒன்றுமில்லை என்றவாறு.

இப் பாசுரத்தில் "செங்கண் வேடனாய் என்னொடும் வந்தும்" என்பது தான் ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பாகம்:

இதுவரை சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம் எழுதினவர்கள் இவ்விஷயத்தை எப்படியோ விட்டுவிட்டார்கள். சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சிவபெருமான் வேடரூபத்தோடு கூடச் சென்று அருள்கள் செய்திட்ட சங்கதி எந்தப் பதிப்பிலும் காணோம்.

சிலர் "திருமுருகன் பூண்டியில் நடந்த சுந்தரர் வேடுபறி" என்று கூறுவர். அது பொருந்தாது. ஏனென்றால் ஆங்கு வேடர்களாய்ப் போய் ஆறலைத்தது பூத கணங்களே யொழியச் சிவபெருமான் அன்று. ஆதலால் இப்பாசுரத்தில் சொன்ன சங்கதி திருமுருகன்பூண்டி வேடுபறி அல்ல.

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு எந்த இடத்தில் சுவாமி வேடரூபமாய் வந்தார் என்று அவர் சென்ற தலங்களின் புராணங்களை ஆராயுமிடத்து, **திருத்துடிசை** என்னும் தலத்தில்தான் சுமாமி நாயனாருக்கு வேடரூபமாய் வந்து அருள்கள் செய்தார் என்று ஏற்பட்டது.

நமது நாயனார் திரு அவிநாசியின்கண் முதலைவாய்ப் பிள்ளையை அழைத்தபின் திருத்துடிசையம்பதியை நோக்கி வருவாரானார்.

"மட்டிலகு மலரவிழ்ந்த வைகறையில் எழுந்துதிரு வாயில்சார்ந்து
விட்டசுட ரொளியிலகு புக்கொளியா னடிபரவி விடைபெற்றேகி
நெட்டிசையின் றமிழ்முனிபூ சனையுகந்த துடிசையில்வாழ் நிமலற்
[போற்றி
அட்டில்வினைப் புனமுருங்கை யடகவிநல் லமுதுவிருந் தளிக்கவுண்
[டார்."

(திருவவிநாசிப் புராணம்)

திருத்துடிசையம்பதியை நோக்கி மேற்குமுகமாய் வரும்போது துடிசையம்பதியைச் சுற்றிலும் காடுகள் அடர்ந்து இருந்தபடியால் திசை காணமாட்டாது திகைத்து நின்றார் சுந்தரர். அப்போது திருத்துடிசை

யம்பதிவாழ் சுவாமியும் அம்மனும் சிவந்த கண்களையுடைய வேடனாகவும் வேடுவச்சியாகவும் வேடமெடுத்துச் சுந்தரர் முன்பு போய் அவரைத் தேற்றி வழிகாட்டித் திருத்துடிசை நகருக்குக் கூட்டிவந்து, விருந்தளித்து வேண்டும் வரங்களை ஈந்து அருள்கள் செய்தார். அதன்பின் சுந்தரர் திருப்பேரூர் (மேலைச்சிதம்பரம்) என்னும் தலத்தை அடைந்து அதன்பின் திருவஞ்சைக்களம் சென்றார்.

“ துடிசையம் பதியை நோக்கிச் சுந்தரர் சென்ற காலை
நெடியவிண் ணோங்குஞ் சோலை நெருங்கிய வடவி சார்ந்து
கடிமிகக் கொண்டு தேர்ந்து கைலையங் கழவுட் போற்றிக்
கொடிவழி பார்த்துச் சென்றார் கோவணன் றோழன் மாதோ.

கதிரவ னுழைய வொண்ணக் காட்டிலே போகு மாறு
நதியணி கடவுட் டோழ னம்பியா ரூரன் காண
தெதிரதி யாரு மோரா தெம்பிரான் றன்னை நோக்கித்
துதியெடுத் தியம்ப லும்மே தொண்டருக் கெளிய னன்று.

சொல்லருங் கிராத வேடந் துணைவியுந் தானுங் கொண்டு
மெல்லவே நடந்து வந்து மேதினி புகழ வன்று
ஒல்லுநர் தம்மை நோக்கி யுயங்குத லொழித்தி யென்று
வல்லுரர் தன்னி னல்ல வழிதனைக் காட்டி யாங்கே.

தொல்வினை தீர்க்கு மூதூர்த் துடிசையம் பதியி னெல்லை
ஒல்லையே வந்து சேர வும்பருக் கரிய னன்று
வல்லபை யோடும் வானின் மறைதலும் வாக னூழ்ந்து
தொல்மறை பாடி யாடித் துடிசையை நண்ணி னூரால்.

(திருத்துடிசைப்புராணம்)

இனி விருந்திட்டதற்கு மேற்கோள் :

“ கடிய தானமுட் கான முருங்கையின்
நெடிய காயட காதிய நெய்சுவைப்
பொடிவி ராய பொறித்த புளிக்கினம்
முடிவி லாத முதிர்கறி பாகரோ.”

(திருத்துடிசைப்புராணம்)

சுவாமி நாயனாருக்கு இந்தத்தலத்தில் காட்டு முருங்கைக்கீரை சமைத்து விருந்து செய்ததாகத் தெரிகிறது. இன்னும் அந்த விருந்து அந்த க்ஷேத்திரத்தில் அந்த நட்சத்திரத்தில் அறிகுறியாக நடந்துவருகிறது.

ஆகையால் திருத்துடிசையம்பதிக்குத் தேவாரம் இப்போது இல்லாமற் போனபோதிலும் இருந்து இறந்துபோயிற் றென்பதே பொருத்தம்.

ஆதலின் திருவாழ்க்கொளிப் புத்தூர்த் தேவாரத்தில் கூறிய "செங்கண் வேடனாய் என்னொடும் வந்தும்" என்பதற்கு இப்புராண வாயிலாக நாம் பொருள் செய்தல் பொருத்தமாகிறது.

துடிசைகிழார். அ. சிதம்பரனார்.

---

## காகம்.

---

காகம் கருமை நிறங்கொண்ட வுடலையும் சாம்பல் நிறம் வாய்ந்த கண்டத்தையுமுடைய ஓர் புள். இது கா! கா! என்று கரைவதனாலேயே காக்கை, காகம் என்ற பெயர்களைப் பெற்றது போலும்! இது கருமை நிறமாய் இருப்பதனால் கரும்பிள்ளை, மேகவண்ணன் என்ற மறுபெயர்களும் வாய்க்கப்பெற்றுளது. பெரும்பாலும் மாந்தர்கள் மன்னும் ஊர்களில் இருப்பதால் ஊர்ப்பறவை என்ற வேறு பெயரையும் பொருந்தப் பெறும். ஆகாயத்தைக் கெடுக்கும் விடம்பொருந்திய புழு, பூச்சிகளைத் தின்று ஆகாயத்தைச் சுத்தி செய்வதால், ஆகாயத்தோட்டி என்றும் அறையலாகும்.

காக்கைகளில் அண்டங்காக்கை, சாதாரணக் காக்கையென இருவகை காணப்படுகின்றன. அண்டங்காக்கை சாதாரணக் காக்கையின் மேற் கருமையும் பெருமனும் பொருந்திய யாக்கையை யுடையது. அது கம்பீரமான உரத்த தொனியாற் கரையும். சாதாரணக் காக்கைகளைப் போல் இது எப்பொழுதுங் காணக் கிடப்பதில்லை. அது சாதாரணக் காக்கைகளைக் கொத்தித் துன்பப்படுத்துவது முண்டு. சாதாரணக் காக்கைகளே எங்குங் காணக்கிடப்பன.

காகம் வைகறையில் துயில் நீங்கி, கா! கா! என்று கரைவது எப்படித் தோற்றுகிறது? "உழவர்களே! நீங்கள் இவ்வேளையிலெழுந்து நுமது கால்நடைகளை யோரிற்பூட்டுங்கள், நிலத்தை உழுங்கள், நல்லபலன் கிடைக்கும்" என்று சொல்வது போலிருக்கிறது. "மனையிற் றுயிலும் பெண்மணிகாள்! நீங்களெழுந்து வீட்டுமுற்றம் பெருக்கிச் சுத்திசெய்து விசித்திரமான கோலங்களை யிடுங்கள்" என்று சாற்றுவதுபோல் தோற்றுகிறது. "சிறுவர்காள்! நீங்கள் நும் பாடங்களைச் செவ்வனே வாசித்து ஆராய்ந்தறியத் தக்க காலம் இந்த வைகறையே! ஆகலின் நீங்கள் துயில்

நீத்து எழுந்திருங்கள்?" என்று பறையறைவதுபோ லிருக்கின்றது. "சான்றோர்களே! நீங்கள் நித்திய கருமானுட்டானங்களைச் செய்யத் தகுந்த நேரம் இதுவே, விரைவில் எழுந்திருங்கள்" என்று விளம்புவது போலிருக்கின்றது.

"புறத்தூய்மை நீரானமையும்" என்னுஞ் சீரியர் வாக்குக் கிலக்காக, காகம் தன்னினத்துடன் அந்திப் பொழுதில் நன்னீரில் மூழ்கிக் களித்துத் தன்னுடலைச் சுத்தி செய்துகொண்டு தன்னிருப்பிடஞ் சேர்கிறது. தன் சுற்றத்தைத் தழுவுகின்ற சிறந்தகுணம் உடையது காகமே. "காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்" என்ற பட்டினத்தடிகளின் திருவாக்கும்,

"நீதி † லரிட்டங்கள் செய்யவுண வைக்கொள்ள
மேதினியிற் றம்மினத்தை மேவுதலால்—நீதிநெறி
போற்றுபுகழ் புன்னைவன பூபாலா வுற்றுரை
மாற்றிருமெய் நப்போல் வளை."

என்ற இராமபாரதியார் திருவாக்கும் இங்கு உணரத் தக்கன.

"உண்டிக்கழகு விருந்தோடுண்ணல்" என்ற ஒளவைப் பிராட்டியார் திருவாக்கும் காக்கையி னரிய குணத்தை வெளிப்படுத்தவே எழுந்ததுபோலும்! ஒரு காக்கை ஓரிடத்தில் ஓரிரை கிடக்கக் காணின், அவ்விடத்தை யடைகிறது. உடனே கா! கா! என்று கரைந்து தன்னினத்துக்கு அவ்விடத்திலுள்ள தீனியைத் தெரிவிக்கின்றது. இக் கூச்சலைச் செவியுற்ற காகங்கள் பல அங்கு வந்து சேரும். அப்பொழுது எல்லாக் காகங்களும் ஒன்றுகூடி அத்தீனியைத் தின்று முடிந்ததும் ஓடிவிடுகின்றன.

இதுவுமல்லாமல் காகத்தினிடம் உறவாட்டற் குணம் ஒன்றும் அமைந்துள்ளது. ஒரு காகம் ஓரிடத்தி லிறந்து கிடந்தால் மற்றைய காகங்களெல்லாம் ஒருங்குசேர்ந்து அக்காகத்தைச் சார்ந்து பன்முறையும் விடாமற் கரைந்து இறந்த காகத்தின்மே லுள்ள தமது அபிமானத்தை வெளியாக்குகின்றன. அவ்வமயம் எவரேனும் இறந்த காகத்தைச் சமீபிக்கின் அவர்களை அக்காகங்கள் மூக்குகளாற் கொத்தியும், சிறகுகளாலடித்துந் துன்புறுத்தாநிற்கின்றன.

காக்கை சாதாரணத்தில் தந்திர யுத்தியும் சமயோசித புத்தியும் வாய்ந்தது. எப்பொழுதும் அச்சத்துடனே யிருக்கும். சிற்சில சமயங்

† அரிட்டம் - காகம்.

களில் தைரியத்துடன் சிற்சில காரியங்களைச் செய்துவிடும். வெகு தூரத்தில் உயர இருந்து கீழுள்ள பொருள்களை நன்றாய்த் தெரிந்து கொள்ளுஞ் சக்தியுடையது. இதனால் காக்கைக்கு "நெடுகக்காண்டல்" என்னும் அரியகுணம் உண்டென்பது தெளிவாம். இது எப்பொழுதும் எவ்வேலையிலும் சோம்புவது கிடையாது. மிகுந்த சுறு சுறுப்புடன் வேலை செய்யும். 'மடியின்மை' என்னுங் குணத்தை மாண்புடன் அமைந்துள்ளது இக்காகம்.

"சொல்லு மவதானஞ் சோம்பின்மை தான்மறைதல்
நல்லிரை தேடி நனிதிரட்டல்—சொல்லுமிவை
காக்கை யிடத்திருந்து கற்கப் படுங்குணமாம்
நோக்கி யறிக நுனித்து." (சாணக்கிய நீதிவெண்பா)

என்ற செய்யுள் இங்குக் கவனிக்கத்தக்கது.

காகம் மற்றப் பிராணிகளைப் போலல்லாது மறைந்து புணரும் உயர்குணம் உடையது. 'குயின் முட்டை தனதென்று காக்கை யடை காக்கும்" என்பதாலும், "காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்பதாலும், காக்கை குஞ்சு பொரித்துக் காப்பாற்றுவதில் மிகப் பிரியங் கொண்டதென்பது தெரிகின்றது. "கங்கையில் மூழ்கினாலும் காக்கை யன்னமாமோ" என்பதால் காக்கை தன்னிறத்திலும், "........ சிறிய காகம், அன்ன நடை நடக்கப் போய்த் தன்னடையுங் கெட்டவாறு யாருந்தானே" என்பதால் தன்னடையிலும் இகழ்வுறுகின்றது. காக்கை சோறு, தானியம், புழு, பூச்சி முதலிய எல்லாப் பொருள்களையும் உணவாகக் கொள்கிறது. ஆனால் "வேம்பன்றோ காக்கை விரும்புங் கனி" என்பதாலும், "மிடைகருங் காகங்க ளொக்கனி யிருந்தாலும் வேப்பங் கனிக்கு நாடும்" என்பதாலும், வேப்பங்கனியைத் தவிர மற்றைய கனி வர்க்கங்களில் காக்கைக்கு விருப்பம் இல்லையென்பது பெறப்படுகின்றது. காகத்துக்குக் கூகையைப்போல் இரவில் கண் நன்றாய்த் தெரிவதில்லை. இதனால் கூகை இரவில் காகத்தைக் கொத்தித் துன்புறுத்துவதுண்டு. பகலில் காகம் கூகையைக் கொத்தித் துன்பப்படுத்தித் தன் பகையைத் தீர்த்துக்கொள்ளும்.

"பகலெலாங் காகங் கூகை பதைத்திட வதைக்கும்." (பஞ்சதந்திரம்.)

"காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையை" (குமரேசசதகம்.)

"பகல் வெல்லுங் கூகையைக் காக்கை யிகல் வெல்லும்" (திருக்குறள்.)

"காகம் வருந்திவரக் காரிருளில் நன்மை செய்த
கூகைபகற் பட்ட கொடுமையினல்"— (ஆத்திசூடி வெண்பா.)

என்னும் வாக்கியங்கள் மேற் கூறப்பட்டதை வலியுறுத்துகின்றன.

காக்கையினிடத்திருந்து நாம் கற்கவேண்டிய குணங்கள் பல.

"காலை யெழுந்திருத்தல் காணும லேபுணர்தல்
மாலை குளித்து மனைபுகுதல்—சாலவே
உற்ருரோ டுண்ண லுறவாட லிம்மூன்றுங்
கற்ருயோ காக்கைக் குணம்"

என்றபடி வைகறையில் துயில் நீத்தலும், நாள்தோறும் நீராடித் தூய்மை யுறுதலும் சுற்றத்தாரோ டுண்ணுதலும், உறவாடுதலும் முதலியனவாம்.

மு. மாணிக்கநாயகர்,
புதுவை.

---

திருக்கச்சி ஏகாம்பரநாதர் வைரமுடிச்சேவை

நவமணிமாலை.

(காஞ்சி ஸ்ரீமந் சோணசல பாரதியாரவர்களால் இயற்றப்பட்டது.)

காப்பு வெண்பா.

மாமேவு காஞ்சி வளநகர்வா ழேகம்பர்
தேமேவு வைரமுடிச் சேவைதனை — யாமேத்தச்
செல்விகட சக்கரனேர் செம்முலைதோய் மானடங்காண்
தொல்விகட சக்கரனேர் சொல்.

கட்டளைக்கலித்துறை.

மாணிக்க வாசகர் கொண்டாடுங் கச்சி வளர்கம்பர்பொன்
வேணிக் கலங்கார மாமதி மேவிய மேன்மைகண்டே
பேணிக் கதிரவன் மாதவஞ் செய்துற்ற பேறுகொலோ
ஆணிக் கனக வயிர முடிச்சேவை யற்புதமே.

முத்த நகைக்காமக் கண்ணி மடியின் முருகனெழுந்
தொத்த கணேசற் கொளித்துக்கம் பேச ஒளிர்சடையைக்
கைத்தலம் பற்றிப்பின் னேறிச் சிரத்திற் கருணைமுகம்
வைத்தண்ணல் காண்கெனல் போலும் வயிர மணிமுடியே.

பவளச்செம் மேனிப் பிரானன்பர் பாலிற் பலிவிரும்ப
விவளெங் கறம்வளர்த் தாளென் றிடாதுல கேத்தவுமைக்
குவகை யுறச்சடை காட்டார் வயிரத் தொளிர்முடிபூண்
டவளுடன் கம்பர்நற் காட்சிதந் தார்நம் மருந்தவமே.

பச்சை நிறத்திருக் காமக்கண் வல்லியோர் பாற்படாக்
கச்சி நகரச் சுவர்க்கத்தி லேகம்பக் கற்பகந்தான்
மெய்ச்சடி யாரன்பு நீரை யடியின் விழைவினுண்டே
யுச்சியின் வைர முடியொண் கனியை யுதவியதே.

புருடார கத்துளம் பூங்கோயி லாகப் பொலிந்தமர்ந்தே
யருடா நிற்குந் திருக்கச்சி யேகம்பர்க் கன்புசெய்தோர்
பொருடாா நின்றவப் புண்ணிய மேமுதற் பூடணமாத்
தெருடா நிற்கும் வயிர முடிச்சேவை சீவருக்கே.

வச்சிரக் கையன் கமண்டலக் கையன் வளைக்கையனு
மொய்ச்சிருக் குங்கச்சிக் கம்பர் வயிர முடிப்பெருமை
மெச்சிரண் டாயிர நாவனந் தற்கும் விளம்பரிதாற்
கைச்சிரம் வைத்துக்கண் வைத்தன்பு வைத்துக் கருத்துவையே.

நீலம் மலர்பொய்கை சூழ்திருக் கச்சியு ணீடறஞ்செய்
யேலம் மலர்க்குழ லம்மை தழுவ விளகுகம்பர்
கோலம் மலர்வயி ரம்முடிச் சேவை கொடுக்கக்கண்டால்
ஞாலம் மலரும் பிறப்பே சிறப்பென்பர் ஞானருமே.

கோமே தகக்கச்சிக் கம்பர் முகங்கண் குளிர்நகைவா
யோமேவு குண்டலக் காதுமைக் கண்ட முரம்புயங்கை
தூமேவு வேதச் சிலம்படி யேநம்மை தொண்டரையுந்
தேமேவு வைர முடிகாட்டு நாளுமுட் டேர்ந்தவர்க்கே.

வைதூ ரியவரு ளென்றம்மை பூசிக்க மாமணங்கொண்
டெய்தூ தியக்கச்சிக் கம்பேசர் தங்க விடபமிவர்ந்
துய்தூய பங்குனி யுத்தர நாளி னுலாவியருள்
பெய்சீர் வயிர முடிச்சேவை யன்பர் பெருகுகவே.

## வெண்பா.

முன்னுகயி லாச முதலியார் கச்சிநகர்
துன்னுகம்பர் வைரமுடித் தொண்டுசெய்ய — மன்னுமதைப்
பண்பான தாளயுத்திப் பங்குனி யுத்தரநா
ணண்பாளர் சூட்டினர் நன்கு.

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பரும், ஆயுர்வேத

## ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

10. பேதி மாத்திரைகள் :— வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய்ப் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள், சகல வாயு, மலச்சிக்கல், அக்கினி மாந்தம், வாதம், கை, கால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1 – க்கு அணு 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

11. ஜ்வர சம்ஹாரி :— தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர் சுரம், முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்தி சுரம், மாலை சுரம், மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்புவெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலாமுறை சுரம் முதலிய சகல சுரங்களையும் அடியோடு போக்கும். டப்பா 1 – க்கு ரூபா 1, வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

12. உரோம சம்ஹாரி :— இந்தச் சூரணத்தை மயிருள்ள இடத்தில் தடவினல் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1 – க்கு அணு 4. ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.